# சங்க இலக்கியத்தில் தமிழர் இல்லறப் பண்பாடு
# Tamil Domestic Culture in Sanga Literature

**க.வீரராகவன்.** (07908/Ph.D,-K6/Tamil/Part Time/April2016/Date:06.04.2016) பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை. அரசு கலைக்கல்லூரி, திருவெறும்பூர் திருச்சி-22.
*(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)*
K.VEERARAGAVAN. (07908/Ph.D,-K6/Tamil/Part Time/April2016/Date:06.04.2016) Part time Research Scholar, Department of Tamil, Govt.Arts College,Thiruverumbur, Trichy-22, Tamil Nadu. (Affiliated to Bharathidasan University)
ORCiD: https://orcid.org/0000-0002-3393-9036

**முனைவர் வை.இராமன்.***M.A.,B.Ed.,Ph.d. உதவிப்பேராசிரியர் & நெறியாளர், தமிழ்த்துறை, அரசுக் கலைக்கல்லூரி, திருவெறும்பூர் திருச்சி-22.* (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
Dr.V.RAMAN.,Assistant professor of Tamil, Department of Tamil, Govt.Arts College,Thiruverumbur, Trichy-22, Tamil Nadu. (Affiliated to Bharathidasan University)
ORCiD: https://orcid.org/0000-0002-6259-9712

**ஆய்வுச் சுருக்கம் :**
*தமிழர் வாழ்வும் வரலாறும் இன்றளவும் உலகில் சிறப்புடன் பேசப்பட்டு வருகின்றது, இதற்கு அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையும் அவ்வாழ்க்கை முறைக்கு ஏற்ற அறக்கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு அக்கோட்பாடுகளை கடைப்பிடித்து வாழ்வில் சிறந்து விளங்கியதுமே காரணமாக அமைகின்றது. எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று இல்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஒரு வாழ்க்கை நெறியை வகுத்துக் கொடுத்து அதற்கு அகம், புறம் என்று பெயரிட்டு சிறந்ததோர் இலக்கணத்தையும் வகுத்து அளித்துள்ளனர். இல்லறம் என்பது என்ன இல்லறத்தில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளான கற்பு நெறி, குழந்தைப்பேறு, விருந்தோம்பல், இல்லற வாழ்வில் கணவனின் கடமைகள் ஆகியவற்றை எவ்வாறு கடைப்பிடித்தனர் என்பதை இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ள செய்வதோடு அக்கோட்பாடுகளை கடைப்பிடிப்பதற்கு வழிகாட்ட வேண்டும் என்பதனை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.*

**ABSTRACT**
The life and history of Tamils is still being talked about in the world today, and the reason for this is that the way of life they lived and the way of life they had laid down the principles of morality and followed those principles and excelled in life. They have laid down a way of life that they should live in this way instead of living however they want and naming it as Akam and Puram, they have also given a grammar to them. This review is aimed at making the present generation know what the norms of home life such as chastity, childbearing, hospitality, husband's duties in domestic life were followed and to guide them to follow those principles.

**முன்னுரை :**
*தமிழ் மொழி மட்டுமன்று கடந்த கால தமிழர்களின் வாழ்வினை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்கின்ற கருவியாகவும் அமைந்துள்ளது. தமிழினம் உலகில் மூத்த இனம் என்பது அண்மைக்காலமாக நடைபெற்று வருகின்ற ஆய்வுகள் மூலமாக உலகிற்கு வெளிப்பட்டு வருகின்றது. உலகில் மூத்த மக்களினம் என்பதோடு அவர்களது பண்பாடு, கலாச்சாரம், பழக்க வழக்கம், நம்பிக்கை போன்றவைகள் பழமையானதாகவும் பெருமைப்படத்தக்க வகையிலும் அமைந்துள்ளது என்பது மற்றுமொரு சிறப்பாகும். தமிழரது இல்லறம் நல்லறம் என்று குறிப்பிடுவதிலிருந்து இவர்களுடைய வாழ்க்கை முறை அறநெறி தவறாதது என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது. இல் + அறம் = இல்லறம். இல் என்பது இல்லத்தினையும், அறம் என்பது நீதியினையும் குறிக்கக்கூடியது. அறத்தின் வழியே சென்று பொருளீட்டி இன்பமுடன் வாழ்ந்து பின் வீடு பேற்றை அடைவது என்பது தமிழரது வாழ்வியல் கோட்பாடு ஆகும்.*

**இல்லறம் :**
*குடும்பம் என்பது ஆணும் பெண்ணும் திருமண பந்தத்தால் இரண்டறர பிணைக்கப்பட்ட ஓர் அமைப்பு ஆகும்.. ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து ஒரே வீட்டில் வாழ்ந்து வருகின்றனர்*

என்றாலும் அவர்களை குடும்பமாக இந்த சமுதாயம் ஏற்றுக் கொள்ளாது ஏனெனில் சமுதாய மரபுப் படி நடக்கக்கூடிய மணங்களின் மூலமாக இணைக்கின்ற இருவரையே கணவன் மனைவியாக இச்சமுதாயம் ஏற்றுக்கொள்கின்றது இவர்கள் உறவினர்களாகவோ தெரிந்தவர்களாகவோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை எனலாம். ஊரார் அரிய திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவதையே தமிழர் சமுதாயம் சிறந்ததாக கருதியது என்றாலும் களவு வாழ்வில் ஈடுபட்டு உடன்போக்கை மேற்கொண்டு திருமணம் செய்து கொண்டவர்களையும் தமிழர் சமுதாயம் ஏற்றுக்கொண்டது ஆனாலும் இல்லற வாழ்க்கைக்குரிய கோட்பாடுகளைக் கடைபிடித்தால் மட்டுமே இல்லறம் சிறந்ததாகக் கருதப்பட்டது.

குடும்பம் என்ற அமைப்பு சமுதாயத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றது. "திருமணத்தின் மூலம் இணைக்கப்பட்டு ஒரு குடியிருப்பில் கணவன் மனைவி தாய் தந்தை மகன் மகளை தம்பி தங்கை போன்ற உறவு முறைகளுடன் பொது பண்பை படைத்தும் காத்தும் வளர்ச்சியுருவதே குடும்பம்"

தமிழ் மொழியின் முழு முதல் இலக்கண நூலான தொல்காப்பியம், உலக பொதுமறை திருக்குறள், சங்க இலக்கிய நூல்கள், மற்றும் சிலப்பதிகாரம் ஆகியவை தமிழர்களின் இல்லற வாழ்க்கையினை பற்றி தெளிவாகக் குறிப்பிடுகின்றது. பெண்கள் இல்லறத்தில் இணைவதற்கு முன்பு எப்படி வாழ்ந்திருந்தாலும் இல்லற வாழ்க்கையில் இணைந்த பின்பு சில அறக்கோட்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று தமிழ் இலக்கியங்களும், இலக்கண நூல்களும் குறிப்பிடுகின்றன. இவ் அறக்கோட்பாடுகள் பெண்களுக்கு மட்டும் உரியனவா என்று வினவினால் பெரும்பாலும் கோட்பாடுகள் பெண்களுக்கே உரியதாக குறிப்பிடப்பட்டுள்ளது சிறுபான்மை ஆண்களுக்கும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் தமது காலத்தில் வழங்கிய இல்லறக் கோட்பாடுகளை பட்டியலிட்டு விவரிக்கின்றார். இவர் குறிப்பிடும் இல்லறக் கோட்பாடுகளும் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இளங்கோவடிகள் குறிப்பிடுகின்ற கோட்பாடுகளும் ஏறத்தாழ ஒத்து இருக்கின்றன எனவே தொல்காப்பியர் காலம் முதல் இரண்டாம் நூற்றாண்டு வரை ஏறத்தாழ ஒரே தன்மை உள்ள இல்லறக் கோட்பாடுகளை கடைப்பிடித்து உள்ளனர் என்பதை

**'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்'** (தொல் பொருள் கற்பியல் நூற்பா 11)

என்ற நூற்பாவின் மூலம் அறிந்து கொள்ளலாம். ஒரு இல்லறப் பெண்ணிற்குரிய கோட்பாடுகளை தொல்காப்பியர் கூறினாரே தவிர அவற்றை கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து குறிப்பிடவில்லை அதாவது திருமணத்திற்கு பின்பு கணவனோடு சேர்ந்து இருந்து தான் இவ்வறங்களை செய்ய வேண்டுமா அல்லது கணவனை பிரிந்து இருந்தால், கணவன் இல்லாமல் இருந்தால் கூட இவ் அறச்செயல்களை செய்ய முடியுமா என்பது பற்றி குறிப்பிடவில்லை ஆனால் அவருக்குப் பின் வந்த இளங்கோவடிகள் தம்முடைய சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியை விட்டு பிரிந்து மாதவியிடம் சென்று இருந்த காலகட்டத்தில் ஒரு இல்லறப் பெண் செய்ய வேண்டிய இல்லறக் கடமைகளை கோவலன் தன்னோடு இல்லாததால் தான் செய்யாது விட்டதாக கண்ணகி குறிப்பிடுகின்றார் என்பதை

**'அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை....'**

(சிலம்பு கொலைக்கள காதை 73-73)

என்ற சிலப்பதிகார பாடல் வரிகளில் தெளிவாக பதிவு செய்துள்ளார். இதனை உற்று நோக்கும் பொழுது இல்லறக் கடமைகளை கணவனும் மனைவியும் சேர்ந்து இருக்கின்ற பொழுது தான் செய்ய வேண்டும் என்பது நமக்கு புலனாகின்றது.

இல்லற வாழ்வின் மேன்மையை உலகிற்கு உணர்த்துவதற்கு வள்ளுவர் இல்லறவியல் என்ற ஒரு இயலை ஏற்படுத்தி அதில் இல்லற வாழ்வில் ஈடுபடும் ஆணும் பெண்ணும் கடைபிடிக்க வேண்டிய அறக்கோட்பாடுகளை இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு, புதல்வரைப் பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவைக்கூறல், செய்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை. பொறையுடமை. அழுக்காறாமை.

*புறங்கூறாமை. பயனிலை சொல்லாமை. தீவினை அச்சம். ஒப்புரவு அறிதல். ஈகை. புகழ் ஆகிய அதிகாரங்களின் வழி குறிப்பிடுகின்றார்.*

**இல்லறத்தின் சிறப்பு:**

*இல்லறமே நல்லறம் ஆகும் என்று இல்லறம் பற்றிய சி இலக்குவனார் குறிப்பிடுகின்றார். "இல்லறம் என்பது வீட்டிலிருந்து வாழும் அறநெறி என்னும் பொருளாகும் இல்லற வாழ்வே மக்களை மாக்களிலிருந்து வேறுபடுத்தி உயர்த்துவதாகும்" **(சி இலக்குவனார் இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்ககாலம்) பக் -51)** என்று இல்லறத்தின் சிறப்பு பற்றி தமது நூலில் பதிவு செய்துள்ளார். தமிழரது இல்லற வாழ்வின் சிறப்பினை பெருமையை உலகிற்கு உணர்த்த விரும்பிய வள்ளுவர்*

**அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன் பழிப்பது இல்லாயின் நன்று** *(குறள்- 49)*

*என்ற திருக்குறளின் வழி அறவழியில் நின்று பிறர் பழிக்கும் படி இல்லாத வாழ்க்கையை வாழ்வதே சிறந்த இல்லறம் ஆக உலகிற்கு உணர்த்தியுள்ளார்.*

***1.கற்பு :***

*சங்க இலக்கிய பாடலொன்றில் 'முல்லை சான்ற கற்பின் மகளிர்' என்று குறிப்பிடுவது கூட அக்காலத்தில் மகளிர் கற்பில் சிறந்து விளங்கினர் என்பதை குறிப்பதற்குறிய குறியீடாகவே இப்பாடல் வரிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.*

*கற்பெனப்படுவது சொல் திறம்பாதிருத்தல் என்று கலித்தொகை குறிப்பிடுகின்றது.தலைவன் பொருள் தேடி தலைவியைப் பிரிந்து சென்ற போது அவன் திரும்பி வரும்வரை வேறு எவரையும் நினைக்காமல் பொறுத்திருப்பது அவளின் கற்புத்திற ஒழுக்கத்திற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழர் மனித உணர்ச்சிகளுக்கு மதிப்பு அளித்ததோடு மனித உணர்வுகளை கட்டுப்படுத்தியும் நெறிப்படுத்தும் வாழ்ந்தனர். தலைவன் தலைவியர் துன்பங்களைத் தாங்க முடியாமல் தங்களுக்குள்ளேயே புலம்பும் புலம்பல்கள் எல்லாம் அவர்களின் உணர்வுகளின் வெளிப்பாடாக ஒருசேர சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது.*

*கற்பு என்ற பண்பு தலைவன் தலைவியர் ஆகிய இருவருக்கும் பொதுவான ஒன்றாக இருந்தாலும் அது பெரும்பாலும் பெண்ணிற்கே உரியதாக கருதப்பட்டது. ஒரு ஆண் கட்டாயம் கற்பினை கடைப்பிடிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை ஆனால் பெண்ணிற்கு இத்தகைய நிலை உண்டு. ஒரு பெண் கற்பு நெறியிலிருந்து தவறுகிறாள் என்றால் அதற்கு காரணம் அவள் வாழ்கின்ற சூழ்நிலையும் சுற்றியுள்ள மனிதர்களுமே காரணமாக இருப்பர். அது அவளை மட்டும் பாதிக்காமல் அவளை சார்ந்த குடும்பத்தினர் சமுதாயத்தினர் அவள் வழி வரப்போகின்ற சந்ததியினர் என அனைவரையுமே பாதிக்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது எனவே கற்பு என்பது குடும்பம் சமுதாயம் சார்ந்த உயரிய பண்பாக கருதப்படுகின்றது.*

*தொல்காப்பியத்தின் கற்பியலில் இடம் பெற்றுள்ள முதல் நூற்பா திருமணத்தோடு பொருத்திப் பார்க்கிறது.*

***'கற்பெனப்படுவது கரணமொடு புணர***
***கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்***
***கொடை குறி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'*** *(தொல்-1088)*

*இந்த நூற்பா அவனது திருமணம் பற்றிய பல செய்திகளை விளக்குகின்றது. கரணம் என்னும் திருமண சடங்கு பெண்ணை எடுப்பதற்கு உரிய மணமகன் வீட்டார் பெண்ணை கொடுப்பதற்குரிய மணமகள் வீட்டார் ஆகிய மூன்றையும் இணைத்து நூற்பாவை இயற்றியுள்ளார். அதாவது கற்பு என்று சொல்லப்படுவது சடங்குகளோடு பொருந்தி பெண்ணை மணம் செய்து கொள்வதற்குரிய மரபினை உடைய தலைவன் பெண்ணை கொடுப்பதற்குரிய மரபினை உடைய பெண் வீட்டார் கொடுக்க மணம் செய்து கொள்வது ஆகும்.*

*சங்கப்பாடல்களில் குடும்ப நிலையில் ஆண் கற்புநெறியில் கறை படியாது வாழும் வேளைகளில் பெண் நடந்து கொள்ளும் விதம் பற்றி பல பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெண்ணின் கற்பு பற்றி கூற வந்த வள்ளுவர் பெருந்தகையாளரும் வாழ்க்கைத்துணை நலம் பற்றி*

***'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்***
***திண்மை உண்டாகப் பெறின்'*** *( குறள்-54)*

*என்ற குறளில் பெண்கள் மன உறுதி பெற்றிருந்ததை பதிவு செய்துள்ளார். அவள் தன்னையும் காத்து தன்னை திருமணம் செய்து கொண்ட கணவனையும் காத்து குடும்ப நிலையில் அமைந்த கற்பு நெறியையும் காத்து சோர்வில்லாமல் வாழும் திறமை பெற்றவள் என்பதை உலகிற்கு வெளிப்படுத்துகின்றாள்.*

***மக்கட்பேறு :***

*கணவனே கண்கண்ட தெய்வம் என்று வாழும் கற்புடைய பெண்கள் கணவன் தன்னைப் பிரிந்து பொருள் தேடி சென்ற காலத்தில் தன்னை அலங்கரித்து கொள்ளமாட்டாள் என்பதனை ‘மண்ணாவயின் மணம் கமழ் கொண்டு’ என்ற பதிற்றுப்பத்து(21:33) பாடல் வரியின் மூலம் அறிந்து கொள்ளலாம். இக்கருத்தை ‘காவலன் நாடு காவற்கும் வினை செய்தற்கும் பிரிந்த வழி கற்புடை மகளிர் தம்மை ஒப்பனை செய்து கொள்ளாராகளின் என்று கா.கோவிந்தன் தம்முடைய தமிழர் வரலாறு (பக்-425-426) என்ற நூலில் பதிவு செய்துள்ளார்.*

*ஒரு பெண்ணின் அது இல்லற வாழ்வு சிறப்புற வேண்டுமென்றால் பிள்ளை பெறுவது இன்றியமையாத ஒன்றாகும். பழங்காலத்தில் குழந்தைகளை பெற்றெடுத்த பெண்களையே சிறப்பாக போற்றி புகழ்ந்தனர். அப்பெண் பெற்றெடுக்கும் குழந்தையே அக்குடும்பத்தில் விளக்காக கருதப்பட்டது என்பதை கீழ்காணும் பாடல்வரி மூலம் அறிந்து கொள்ளலாம்*

***" கடவுள் கற்பொடு குடிக்கு விளக்காகிய***
***புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்***
***நன்ன ராட்டி..........................................."*** ***(அகம்.184)***

*நிலையில்லாத இவ்வுலகில் நிலையான புகழை கொடுக்கவல்லது பிள்ளைச் செல்வம் ஒன்று மட்டுமே ஆகும் அது இப்பிறவியில் மட்டும் அல்லாது மறுபிறவியிலும் கூட இன்பம் தரக்கூடியது என்று மக்கள் நம்பினர். வாழ்வின் இறுதியில் வீடுபேறு அடைவதற்கு கூட குழந்தைபேறு இன்றியமையாத ஒன்றாக இருந்தது. ஒருவர் இறந்தபின் ஈமச்சடங்குகள் நடத்தவும் ஆண்டுக்கு ஒருமுறை தென்புலத்தார் கடன்களை செய்ய குழந்தை அவசியம் என்பதை பழைய இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன அதில் அகநானூறும் தன் பங்கை செலுத்தியுள்ளது என்பதை கீழ்காணும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.*

***" இம்மை உலகத்து இசையொடும் விளங்கி***
***மறுமைப் பயனும் மறுவின்றி எய்துப***
***செறுநறும் விழையும் செயிர்தீர் காட்சிக்***
***சிறுவர் பயந்த செம்மலோர் என***
***பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்***
***வாயே ஆகுதல் வாய்த்தனம்.... "*** ***(அகம்.66)***

*தமிழர் வாழ்வியல் கொள்கைகளில் ஒன்று மக்கட்பேறு ஆகும். ஒரு குடும்பத்தின் எல்லையற்ற மகிழ்ச்சிக்கு காரணம் மக்கட்செல்வமே செல்வங்கள் அனைத்திலும் முதன்மையானது சிறந்தது.*

***" யாழோடும் கொள்ளா பொழுதொடும் புணரா***
***பொருள் அறிவாரா ஆயினும் தந்தையர்க்கு***
***அருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை"*** ***(புறம்.92:1-3)***

*என்ற புறநானூற்றுப் பாடலில் குழந்தைகள் பேசும் புரியாத இனிமையான பேச்சுக்களின் குறிப்பால் புரிந்துகொள்ளும் சிறப்பினாலே குடும்பமானது மகிழ்ச்சியும் அன்பும் நிறைந்ததாக அமையும் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. குடும்ப வாழ்வில் குழந்தை செல்வம் இல்லை என்றால் வாழும் வாழ்க்கை பயனற்றதாகி விடும் என்பதை*

***" குறுகுறு நடந்து சிறுகை நீட்டி***
***இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்***
***நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்***
***மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை***
***இல்லைத் தாம் வாழும் நாளே"*** ***(புறம்.188 :3-7)***

*என்ற பாடலின் மூலம் அறிந்து கொள்ளலாம். குடும்ப வாழ்வில் உள்ளோர் தங்களிடமுள்ள பொருளை தாங்களும் பயன்படுத்தி குடும்ப உறுப்பினர்கள் ஆகிய குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்கவும் செய்தனர்.*

***விருந்தோம்பல் :***
*தமிழ்மொழியின் முழு முதல் காப்பியமான சிலப்பதிகாரமும் இல்லற வாழ்வில் விருந்தோம்பலை கடைப்பிடித்தல் சிறந்த மனையறம் ஆக குறிப்பிடுகின்றார்*

***……ஞாலம் முழுவதும் வரினும்***
***வழங்கத் தவாஅ வளத்தது ஆகி,***
***அரும் பொருள் தரூஉம் விருந்தின் தேஎம்***
***ஒருங்கு தொக்கன்ன உடைப் பெரும் பண்டம்***
***கலத்தினும்……..*** ***( சிலம்பு. மனையறம்படுத்த காதை.3-6 )***

*என்ற பாடல் வரிகள் பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் முழுவதும் புகார் நகரத்திற்கு விருந்தினராக வந்தாலும் அவர்களுக்கு உணவு அளிப்பதற்கு தேவையான பொருட்கள் அனைத்தும் அங்கியிருந்ததாக குறிப்பிடுகின்றார்.*

***வார் ஒலி கூந்தலைப் பேர் இயல் கிழத்தி***
***மறப்பு அரும் கேண்மையோடு அறப் பரிசாரமும்,***
***விருந்து புறந்தரூஉம் பெரும் தண் வாழ்க்கையும்,***
***வேறுபடு திருவின் வீறு பெறக் காண,***
***உரிமைச் சுற்றமோடு ஒரு தனிப் புணர்க்க,*** ***( சிலம்பு. மனையறம்படுத்த காதை.84-88 )***

*கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் முடிந்தபின் தனியாக வாழ்ந்து இல்லற வாழ்விற்கு உரிய அறச்செயல்களை செய்தல் வேண்டும் என்று எண்ணி கோவலனது தாய் தனியே குடித்தனம் வைத்ததாக இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் பதிவு செய்துள்ளார். தொல்காப்பியர் திருவள்ளுவர் இளங்கோவடிகள் ஆகியோர் இல்லற வாழ்விற்கு உரிய அறச்செயல்களுள் ஒன்றாகவும் முதன்மையானதாகவும் விருந்தினரைப் போற்றுதல் என்பதை குறிப்பிடுவதைக் காண்கின்ற பொழுது இல்லற வாழ்வில் விருந்தோம்பல் இன்றியமையாவிடத்தைப் பெற்றுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.*

***விருந்தும் விருந்தோம்பும் முறைகளும் :***
*தமிழர் பண்பாட்டில் தலை சிறந்தது விருந்தோம்பல். இல்லற வாழ்வின் கடமைகளுள் ஒன்றாகவும் கணவனும் மனைவியும் இணைந்து ஆற்றவேண்டிய அறச்செயல்கலில் மிகச் சிறந்ததாகவும் இருப்பது விருந்தோம்பல் ஆகும். விருந்தோம்பலின் சிறப்பை உணர்ந்த வள்ளுவர் விருந்தோம்பல் அதிகாரத்தை படைத்துள்ளார். தம் இல்லத்திற்கு வருகின்ற விருந்தினர்களை அன்போடு வரவேற்று இனிமையாகப் பேசி தன் வீட்டிலுள்ள உணவினை பரிமாறி அவர் சென்ற பின் மற்றொரு விருந்தினரை எதிர்பார்த்து காத்திருப்பவர் விண்ணுலகில் உள்ள தேவர்களுக்கு விருந்தினராவார் என்பதை திருவள்ளுவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.*

***செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்***
***நல்வருந்து வானத் தவர்க்கு.*** ***(குறள். 86)***

*தொல்காப்பியர் காலத்திலேயே விருந்தோம்பும் பண்பு இருந்துள்ளது எனவேதான் இல்லற வாழ்வில் இருக்கும் மகளிரின் தலையாய கடமைகளுள் ஒன்றாக விருந்தோம்பலை குறிப்பிட்டிருக்கிறார்.*

***கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்***
***மெல் இயல் பொறையும் நிறையும் வல்லிதின்***
***விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்***
***பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்*** ***(தொல்.பொரு.கற்பியல் நூற்பா.11)***
***விருந்து தானும்***
***புதுவது கிளந்த யாப்பின் மேற்றே'*** ***(தொல். பொரு.செய்.231)***

*இல்லறம் என்பது விருந்தோம்பல் செய்யும் பொருட்டு ஏற்பட்ட அமைப்பு என்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கும் உறவை வலுப்படுத்துவதற்கும் ஏற்பட்ட ஒரு சமுதாய அடையாளமாக விருந்தோம்பல் பண்பு இருந்தது. இவ்வகை விருந்தோம்பலில் விருந்தோம்பும் உணவு முறைகள் ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்றவாறு வேறுபடும். உணவு வகைகள் வேறுபட்டு இருப்பினும் விருந்தோம்பும் பண்பு என்பது எல்லா நிலத்திலும் ஒரேவகையான தன்மையை கொண்டதாக இருந்துள்ளது. ஒரு மனிதனின் குணநலனை ஆராயும் கருவியாகவும் விருந்தோம்பல் அமைகின்றது.*

*“இல்வாழ்க்கை நடத்தும் கணவனும் மனைவியும் தன் உற்றார் உறவினரை காக்க கடமைப்பட்டவர்கள் அத்துடன் நில்லாது தம் இல்லம் நாடி வரும் பிறரையும் உண்டியலும் உரையாலும் உபசரித்தல் அவர் தம் கடமை என்று அற நூல்கள் பகர்கின்றன” **(மா இராசமாணிக்கனார் பத்துப்பாட்டு ஆராய்ச்சி பக்கம் 572)***

***“காமம் சான்ற கடைக்கோட் காலை***
***ஏமம் சான்ற மக்களொடு துவன்றி***
***அறம் புரி மக்களொடு கிழவனும் கிழத்தியும்***
***சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே” (தொல்.பொருள்.கற்.51)***

*திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கை நடத்தும் கணவன் மனைவி ஆகிய இருவரும் தாங்கள் நுகர வேண்டிய இன்பங்களை நுகர்ந்து பின்பு பாதுகாப்பான பிள்ளைகளுடன் சுற்றத்தினரை பேணுதலே சிறந்த அறமாகும் இதுவே இல்லறத்தின் பயன் என்று குறிப்பிடுகின்றார்.*

**விருந்தோம்பலின் சிறப்பு** *:*

*விருந்தோம்பல் எனும் அறச்செயலினை மங்கல வாழ்க்கை வாழ்வதற்குரிய மகளிர்க்கு மட்டுமே உரியது. “கணவனை இழந்தவர்களும் பிரிந்து வாழ்பவர்களும் விருந்து உபசரிக்கும் உரிமை பெறவில்லை” **(ஆ.ராமகிருஷ்ணன் தமிழக வரலாறும் பண்பாடும் பக்கம் 112)** என்ற சான்று இதனை மெய்ப்பிக்கின்றது.*

*கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து வாழ்ந்த காலத்தில் கண்ணகி தன் இல்லறக் கடமைகளை சரிவர செய்ய இயலவில்லை என்று கூறுவதை பின்வரும் பாடல் வரிகள் கொண்டு அறிந்து கொள்ளலாம்.*

***“அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்,***
***துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்***
***விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை . “ (சிலம்பு.கொலைக்களக் காதை 72-74)***

*இத்தகைய விருந்தோம்பல் எனும் அறச்செயலினை கணவன் மனைவி ஆகிய இருவரும் இணைந்தே செய்தல் வேண்டும், ஒருவரை விட்டு ஒருவர் தனித்திருக்கும் போது இந்த அறச்செயலினை செய்ய முடியாது என்பதனை கண்ணகி மற்றும் கம்பராமாயணத்தின் கதைத் தலைவி சீதையின் கூற்றுகள் வழி அறிந்து கொள்ளலாம்.*

*இராவணனால் சிறைபிடிக்கப்பட்ட சீதை அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த போது தன்னை பிரிந்திருக்கும் ராமன் விருந்தினரை கண்டால் என்ன செய்வானோ என்று வருந்துகிறாள்.*

***அருந்தும் ‘மெல் அடகு ஆர் இட அருந்தும்?’ என்று அழுங்கும்;***
***‘விருந்து கண்டபோது என் உறுமோ?’ என்று விம்மும்;***
***‘மருந்தும் உண்டுகொல் யான் கொண்ட நோய்க்கு?’என்று மயங்கும்-***
***இருந்த மா நிலம் செல் அரித்து எழவும் ஆண்டு எழாதாள். (கம்ப.காட்சிப் படலம்.பா-15)***

*என்ற பாடல் வரிகள் கணவனோடு சேர்ந்து இருப்பவர்கள் மட்டுமே விருந்தோம்பல் பண்பினை கடைப்பிடிக்க முடியும் என்பதை உணர்த்துகின்றன. இப்பணியை கணவன் அல்லது மனைவி மட்டும் விரும்பினால் இயலாது. இருவரும் மனம் ஒன்றுபட்டு செய்தால் இயலும் இருவரில் ஒருவர் மாறுபடினும் விருந்தோம்பலைச் சிறப்பாக செய்ய முடியாது. விருந்து போற்றும் கணவனும் மனைவியும் ஒத்த உணர்வு உடையவராய் இருத்தல் இன்றியமையாதது. இவ்வாறு இருந்து விருந்து நடைபெறும் இல்லத்தில் உள்ள கணவனும் மனைவியும் மனம் ஒத்து வாழ்கின்றனர் என்பது கருத்தாகும். அதாவது அவர்களது இல்வாழ்க்கை செம்மையுற நடைபெறுகிறது என்பது பொருளாகும்”**(மா.இராசமாணிக்கனார் பத்துப்பாட்டு ஆராய்ச்சி பக்கம் 512)***

**இல்லற வாழ்வில் கணவனின் கடமைகள்** *:*

*திருமணம் என்ற சடங்கின் மூலம் குடும்பம் என்ற அமைப்பில் சென்ற கணவன் மனைவியர் இல்லற வாழ்வு நல்லறமாக அமைய வேண்டுமெனில் கணவன் மனைவி உறவு வாழ்வின் இறுதி வரை நன்றாக அமைந்து இருத்தல் வேண்டும். கணவன்-மனைவி எவ்வித பிரச்சினையுமின்றி ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி வாழ்க்கை அமைதியாக செல்கின்றது என்றால் அவர்களுக்குள் புரிதல் தன்மை ஏற்பட்டு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழக்கூடிய மனநிலையை எய்திவிட்டனர் என்பது பொருளாகும். இவ்வாறாகிய இல்லறத்தில் நல்ல குழந்தைகளைப் பெற்றெடுத்து சமுதாயத்திற்கு*

ஏற்ற வகையில் வளர்த்து சுற்றத்தினர் ஓம்புதல், விருந்தினரை உபசரித்தல் போன்ற இல்லறக் கடமைகளை செய்வதற்கு பொருள் என்பது இன்றியமையாத ஒன்றாகும் இவ்வகை பொருள் இருந்தால் மட்டுமே கணவன் மனைவிக்கு இடையே எவ்வித கருத்து வேறுபாடும் இன்று இல்லறம் நடத்த இயலும்.

குடும்ப வாழ்க்கையினை சிறப்புற நடத்துவதற்கு பொருள் இன்றியமையாதது ஆகும். இத்தகைய பொருளையும் ஒருபோதும் பிறரிடம் சென்று இரந்து வாழ்க்கை நடத்தக்கூடாது, தீய வழியில் சென்று பாவத்தை சேர்க்கும் விதமாக அப்பொருளை ஈட்டுதலும் கூடாது அதேவேளையில் முன்னோர் சேர்த்து வைத்த பொருளைக் கொண்டு இல்லறம் நடத்துதல் கூடாது அது இழுக்கான ஒன்று எனவே நன்னெறியில் சென்று நல்ல வகையில் பொருளை ஈட்டி வந்து வாழ்க்கை நடத்துதல் வேண்டும். தலைவன் தன் மனைவியிடம் அறவழியில் பொருளீட்ட வேண்டும் என்று கூறுவதை

***அறன்கடைப் படாஅ வாழ்க்கையும், என்றும்***
***பிறன்கடைச் செலாஅச் செல்வமும், இரண்டும்***
***பொருளின் ஆகும், புனையிழை!'' !*** ***(அகநானூறு பாடல்155:1-3)***

என்ற புறநானூற்று பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

இல்லற வாழ்வின் அறப்பணிகளான விருந்தோம்பல் குழந்தைப்பேறு சுற்றம் ஓம்பல், வறியவருக்கும் ஒன்றை ஈதல் போன்றவற்றை சரிவர செய்தால் மட்டுமே இல்லறம் சிறக்கும். அப்பண்பினைக் கொண்ட பெண்ணையே சமூகம் பெருமைப்படுத்தும்.

**பொருளின் பயன் :**

இரக்கம் குணம் உள்ளவர் ஆயினும் பொருள் இல்லையேல் மற்றவருக்கு கொடுக்க இயலாது, ஈதலையும் ஈதலால் வரும் பயனையும் பொருளில்லார் அடைய முடியாது என்பதனை

***"இருள் படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும்***
***அருள் நன்கு உடையர் ஆயினும் ஈதல்***
***பொருள் இல்லோர்க்கு அஃது இயையாது ஆகுதல்***
***யானும் அறிவென் மன்னே"***

***(அகநானூறு பாடல் 335: 1-4)***

***"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க் கில்லெனச்***
***செய்வினை கைம்மிக எண்ணுதி"*** ***(குறுந்தொகை பாடல் 63)***

என்ற பாடல் வரிகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். பொருள் என்பது அறச்செயல்களை செய்வதற்கும் அதனால் வருகின்ற இன்பத்தை அடைவதற்கும் இணைப்பு பாலமாக இருக்கின்றது.

***"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது***
***ஊதியம்இல்லைஉயிர்க்கு"*** ***(குறள் – 231)***

என்று வள்ளுவரின் குறள் மேலும் இதற்கு அரணாக அமைகின்றது. நிலையில்லாத இவ்வுலகில் நிலையாக ஒரு மனிதன் புகழ்பெற எண்ணினால் பொருள் தேடுதல் வேண்டும். சங்க இலக்கியத்தில் அமைந்த நற்றிணை பாடல்(214) ஒன்று பொருளைத் தேடாதவருக்கு புகழ், இன்பம், கொடை ஆகிய இம்மூன்றும் இல்லை என்று குறிப்பிடுகின்றது. பொருள் என்பது எல்லா காலத்திலும் மதிப்புடையதாக இருப்பினும் அதனை அறம் சார்ந்ததாக கூறும் கருத்து சங்க இலக்கியத்தால் பெறப்படும் பொருளீட்டுதல், செலவு செய்தல் ஆகிய எல்லா செயல்களிலும் நோக்கமே இருந்தது என்கிறார் பாலசுப்பிரமணியன் (சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள் பக்கம் 120)

**இல்லற வாழ்வின் கடமை**

இல்லற வாழ்க்கையை மேற்கொண்டிருந்த சங்க கால தமிழர் குடும்ப கடமையோடு சமுதாயக் கடமையும் உண்டு என்று வாழ்ந்தனர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள்

***" இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்***
***நல்லாற்றின் நின்ற துணை"*** ***இல்வாழ்க்கை குறள் 41***
***" துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்***
***இல்வாழ்வான் என்பான் துணை*** ***இல்வாழ்க்கை குறள் 42***
***"தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு***
***ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"*** ***இல்வாழ்க்கை குறள் 43***

*என்ற குறள்களின் வழி வள்ளுவப் பெருந்தகை இல்லறத்தார் ஆற்ற வேண்டிய சமுதாயக் கடமைகளைப் பற்றி இப்படி குறிப்பிடுகிறார்.*

*இறந்தவர்களுக்காக அவ்வப்போது செய்ய வேண்டிய சடங்குகள் தென்புலத்தார் கடன் என்ற பெயரால் குறிக்கப்படும். இதனை சங்க காலத் தமிழர் ஒரு கடமையாகவே கொண்டிருந்தனர் உதயம் சேரலாதன் என்ற சேர மன்னன் வீடுபேறு அடைந்த தன் முன்னோருக்கு தென்புலத்தார் கடன் செய்த செய்தியை ஆனால் அவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

***" மறப்படை குதிரை மாறா மைந்தின்***
***துறக்கம் எய்திய தொல்லா நல்லிசை***
***முதியோர் பேணிய உதியஞ் சேரல்" (அகம்.233: 6-8)***

*என்ற பாடல் சான்றாக அமைகின்றது. இறந்தவர்களுக்கு செய்த கடமையோடு தங்களது கடமை முடிந்துவிட்டது என்று எண்ணாமல் வரியவர் இரவலர் முதலானோருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் உடையவர் களாகவும் சங்கத்தமிழர் வாழ்ந்தனர் இதனை*

***" இரப்போர் ஏந்துகை நிறையப் புரப்போர்***
***புலம்பில் உள்ளமொடு புதுவ தந்துவக்கும்***
***அரும்பொருள் வேண்டும்........." (அகம்.389)***

*என்ற பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.*

**முடிவுரை :**

*இல்லறம் என்ற சொல்லிலேயே அறத்தினை வைத்தான் தமிழன். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற கொள்கை இல்லாது வாழக்கூடிய வாழ்க்கையை தமிழர்கள் ஒருபோதும் வாழவில்லை, அப்படிப்பட்ட வாழ்க்கையினை அவர்கள் வாழ்க்கையாகவும் கருதவில்லை என்பதன் வெளிப்பாடு சங்க இலக்கியங்கள். தமிழர்கள் இல்லற வாழ்விற்கு சில கோட்பாடுகளை ஆணிற்கும் பெண்ணிற்கும் வகுத்து அக்கோட்பாட்டின்படி ஒரு பெண் என்பவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற குணநலன்களை கொண்டிருப்பவர்கள் என்றாலும் கூட தன் கற்பினை காக்கக்கூடிய பெரும் பொறுப்பு அவளிடம் உண்டு கணவன் தன்னை விட்டு பொருள் தேடி செல்கின்ற பொழுதும் இன்னும் பிற செயல்களுக்காக பிரிந்து செல்கின்ற பொழுது கணவனையே நினைத்து வாழ்ந்து வந்தாள் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. இல்லத்தினை நிர்வகிக்கும் பொறுப்பு பெண்ணிடம் வழங்கப்பட்டது. அவள் தன்னையும் தன் கணவனையும், பிள்ளைகளையும், தன்னைச் சார்ந்த உறவினர்களையும் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு இல்லற பெண்ணிற்குரிய கடமைகளையும் சரிவர செய்தாள் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.*

*குழந்தைப்பேறு என்பது தமிழர் சமுதாயத்தில் பெண்ணிற்கு மிக உயர்ந்த இடத்தினை வழங்கக்கூடியது. குழந்தைப்பேறு இல்லாத பெண்ணினை எப்போதும் மதித்து நடத்தியதாக சங்க இலக்கியங்களில் குறிப்பு காணப்படவில்லை உலகில் தமிழரினம் சிறந்து விளங்குவதற்கு மற்றொரு காரணமாக இருப்பது விருந்தினர்களை உபசரிக்க கூடிய முறை ஆகும் அந்த விதத்தில் சங்க கால பெண் நள்ளிரவில் விருந்தினர்கள் வந்தால் கூட அவர்களை உபசரிக்க மறுத்ததில்லை, முகம் சுழித்ததில்லை.*

*இல்லற கோட்பாடுகள் பெண்ணிற்கு மட்டும் உரியதாக இல்லாமல் கணவன் என்ற நிலையை அடைந்த பின் குடும்பத்திற்கு தேவையான வருவாயை ஈட்டக்கூடிய பெரும் பொறுப்பு அவனுக்கு உண்டு என்பதனால் தன் மனைவி மக்கள் அனைவரையும் விட்டு பிரிந்து சென்று பொருள் தேடி வந்து குடும்பத்தினருடன் மகிழ்ச்சியோடு வாழ்ந்தான் இவ்வாறாக ஆணும் பெண்ணும் இல்லற வாழ்க்கைக்குரிய அனைத்து கோட்பாடுகளையும் கடைபிடித்து வரலாற்றில் இடம் பிடித்தனர் என்பதனை எல்லாம் சங்க பாடல்களில் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.*

**பார்வை நூல்கள் :**

1. *புலியூர்க்கேசிகன் குறுந்தொகை மூலமும் உரையும் சாரதா பதிப்பகம் சென்னை 14. ஜூன் – 2010*
2. *புலியூர்க்கேசிகன் அகநானூறு மூலமும் உரையும் சாரதா பதிப்பகம் சென்னை 14. ஜூன் – 2010*
3. *புலியூர்க்கேசிகன் கலித்தொகை மூலமும் உரையும் சாரதா பதிப்பகம் சென்னை 14. ஜூன் - 2010*
4. *புலியூர்க்கேசிகன் புறநானூறு மூலமும் உரையும் சாரதா பதிப்பகம் சென்னை 14.*

5. புலியூர்க்கேசிகன் (2010) திருக்குறள் மூலமும் உரையும் பூம்புகார் பதிப்பகம் பிராட்வே சென்னை 08.
6. கே.எம்.கோமதி சங்கர் சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம் செல்வி பதிப்பகம் சென்னை 1981.
7. சிலப்பதிகாரம் மூலமும் உரையும் பாரி நிலையம் பிராட்வே 184 சென்னை - 01,12ஆம் பதிப்பு 1982
8. தொல்காப்பியம் பொருளதிகாரம் (முழுமையும்) புலியூர்க்கேசிகன் உரை பாரி நிலையம் பிராட்வே சென்னை 108. பதிப்பு 2017
9. திருக்குறள் புதிய உரை புலியூர் கேசிகன் பூம்புகார் பதிப்பகம், 127 பிரகாசம் சாலை பிராட்வே சென்னை 108 பதிப்பு பிப்ரவரி 2010.
10. தமிழர் திருமணம் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் தமிழ் மண் பதிப்பகம் சென்னை. 2000.
11. பத்துப்பாட்டு ஆராய்ச்சி மா. இராசமாணிக்கனர் அவ்வைகாட்சிக் கூடம் 96 பி.வி.கோயில் தெரு
12. சென்னை - 13.
13. கம்பராமாயணம் மூலமும் உரையும் வை மு கோபாலகிருஷ்ணமாச்சாரியார் உமா பதிப்பகம் சென்னை - 01.
14. மணிமேகலை மூலமும் உரையும் புலியூர் கேசிகன் உரை பாரி நிலையம் பிராட்வே 184 சென்னை - 01.
15. இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்க காலம்) சி இலக்குவனார் வள்ளுவர் பதிப்பகம் புதுக்கோட்டை 1962.